மா.ப. இலக்கம் 235

PEOPLE'S BANK
The Bank of the People

# கணக்கு திறக்கும் விண்ணப்பப் படிவம் (நடைமுறை/சேமிப்பு கணக்கு) வரையறுக்கப்பட்ட பொறுப்புகள் கம்பனிகள்

திகதி

| அலுவலக பயன்பாட்டுக்கு மாத்திரம் | | |
|---|---|---|
| கணக்கு இலக்கம் | | |
| CIF இலக்கம் | | |
| தகவல்களைப் பதிந்தவர் பெயரும் சேவை இலக்கமும் | அலுவலர் கையொப்பமும் சேவை இலக்கமும் | முகாமையாளர் கையொப்பமும் சேவை இலக்கமும் |
| | | |

முகாமையாளர், மக்கள் வங்கி

......................................... கிளை

கீழே பெயர்க் குறிப்பிடப்பட்டுள்ள கம்பெனியின் பெயரில் நடைமுறைக் கணக்கு/சேமிப்பு கணக்கு ஒன்றைத் திறக்கும்படி கம்பனி பணிப்பாளர் சபை உங்களிடம் கேட்டுக் கொள்ளுகிறது.

**கணக்கு வகை** ☐ நடைமுறை ☐ சேமிப்பு **உற்பத்தி பெயர் (இருப்பின்)**

**பணம்** ☐ இலங்கை ☐ வெளிநாட்டுநாணயம்............ (தயவுசெய்து பண வகையைக் குறிப்பிடுக) ☐ காசாக ☐ காசோலையாக வைப்பிலிடும் தொகை

**1.** கம்பனியின் பெயர்:

**2.** வியாபாரத்தின் தன்மையும் நோக்கமும்:

**3.** பதிவு செய்யப்பட்ட முகவரி/பதிவு செய்யப்பட்ட பிரதான வியாபார இடத்தின் முகவரி:

**4.** கூட்டிணைக்கப்பட்ட/பதிவு செய்யப்பட்ட திகதி:

**5.** கூட்டிணைக்கப்பட்ட சான்றிதழ் இலக்கம்/பதிவு இலக்கம்:

**6.** வியாபாரம் ஆரம்பிக்கப்பட்ட திகதி:

**7.** உத்தியோகபூர்வ தொலைபேசி இலக்கம்:

தொலைநகல் இலக்கம்:

மின்னஞ்சல் முகவரி:

வரி செலுத்த வேண்டுமா? ☐ ஆம் ☐ இல்லை ☐ வரி செலுத்துபவரை அடையாளம் காணும் இலக்கம்:

கணக்கு கூற்று கிடைக்க வேண்டிய முறை: ☐ தபால் மூலம் ☐ மின்னஞ்சல் மூலம் தேவைப்படுவது: ☐ தினசரி ☐ வாராந்தம் ☐ மாதாந்தம்

இந்தக் கோரிக்கைகக்காக பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். அத்துடன் அப் பத்திரங்களின் பிரதிகள் உண்மையான பிரதிகள் என்பதை சம்பந்தப்பட்ட அதிகாரி (கம்பெனி செயலாளர்) உறுதிப்படுத்த வேண்டும்.

1. கூட்டிணைக்கப்பட்ட சான்றிதழின் பிரதி
2. கம்பனிகள் சட்டத்தின் கீழ் 40வது மாதிரியின் பிரதியொன்று (தற்பொழுதுள்ள கம்பனியைப் பதிவு செய்தல்) அல்லது 1வது மாதிரியின் பிரதியொன்று (கம்பனியொன்றைப் பதிவு செய்தல்) மற்றும் சங்க அமைப்புவிதி.
3. கணக்கு திறப்பதற்காக அதிகாரம் வழங்குகின்ற பணிப்பாளர் சபையின் முன்மொழிந்து ஏற்றுக் கொள்ளப்பட்ட பிரேரணை.
4. கம்பனிகள் சட்டத்தின் கீழ் 20வது மாதிரியின் பிரதியொன்று (பணிப்பாளர்கள்/செயலாளர் மாறுதல் மற்றும் பணிப்பாளர்கள்/செயலாளர் தொடர்பான விபரம்)
5. கம்பனிகள் சட்டத்தின் கீழ் 44வது மாதிரியின் பிரதியொன்று (இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியின் முழுமையான பதிவு முகவரி அல்லது பிரதான வியாபார இடத்தின் முகவரி மற்றும் இலங்கையில் அமைக்கப்பட்டுள்ள அக் கம்பனியின் பிரதான வியாபார இடத்தின் முகவரி
6. கம்பனிகள் சட்டத்தின் கீழ் 45வது மாதிரியின் பிரதியொன்று) இலங்கையில் அமைக்கப்பட்டுள்ள வியாபார இடம் ஒன்றுள்ள இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்டுள்ள பணிப்பாளர் சபையின் பட்டியலும் அது தொடர்பான விபரங்களும்)
7. இலங்கை முதலீட்டு சபையின் அங்கீகாரம் பெற்ற கம்பனியென்றால் முதலீட்டு சபை உடன்படிக்கையின் பிரதி.
8. ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் அங்கீகாரம் பெற்ற கம்பனியென்றால் ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் அங்கீகாரம் பெற்ற கடிதத்தின் பிரதி.
9. பொது உத்தியோகபூர்வ பட்டியல்படுத்தப்பட்ட கம்பனியென்றால், வியாபாரத்தை அரம்பிப்பதற்கான சான்றிதழின் பிரதி.
10. சந்தர்ப்பத்திற்கேற்ப அற்றோனி தத்துவத்தின் அல்லது பணிப்பாளர் சபையின் முன்மொழிந்து ஏற்றுக் கொள்ளப்
11. பட்ட பிரேரணையின் பிரதி மற்றும் கொடுக்கல்வாங்கலை மேற்கொள்ளுவதற்கு அதிகாரம் அளிக்கப்பட்ட நபரின்.

**பணிப்பாளர்களின் தகவல்கள் - (மாதிரி படிவ இலக்கம் அல்லது 40இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி) (பணிப்பாளர் ஒருவர் வெளிநாட்டவராக இருக்கும் பட்சத்தில் தயவுசெய்து அதை விசேடமாகக் குறிப்பிடுக)**

| பெயர் | தேசிய அடையாள அட்டை இலக்கம்/கடவுச்சீட்டு இலக்கம் | தொலைபேசி இலக்கம் | மின்னஞ்சல் முகவரி |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

பணிப்பாளர்களின் எண்ணிக்கை ஐந்து (05) பேருக்கு மேற்படும் சந்தர்ப்பத்தில் எஞ்சியுள்ளவர்களின் தகவல்களையும் இணைக்க வேண்டும்.

கணக்கொன்றை ஆரம்பிப்பதற்காக ………………………………………………………………………………………………………………………………………………………
(கம்பனியின் பெயர்)
……………………………………………………………………………………………………………………………………………திகதி நடத்தப்பட்ட பணிப்பாளர் சபை கூட்டத்தில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பணிப்பாளர் சபை முன்மொழிவு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என்பதையும், அப் பணிப்பாளர் சபை அறிக்கை ஆவணத்தில் ஒழுங்காக அறிக்கைபடுத்தப்பட்டுள்ளது என்பதையும் நாம் இத்தால் உறுதிப்படுத்துகிறோம்.

**தணக்கு திறக்கும் நோக்கமும் பயன்பாடும்**

☐ உற்பத்தி ☐ தொகை வியாபாரம் ☐ சில்லறை வியாபாரம் ☐ இறக்குமதி/ ஏற்றுமதி ☐ தொழில் புரிவோர் ☐ சேவை கைத்தொழில் (தயவுசெய்து குறிப்பிடுக)………………

☐ உணவு வழங்கல் உணவகம் ☐ சேமிப்பு/ முதலீடு ☐ கடன் வழங்கல் ☐ தொழில்/ வருமானம் ☐ வியாபாரம் வருமானம் ☐ ஏனையவை (குறிப்பிடுக)…………..

## தணக்கைப் பயன்படுத்துவது சம்பந்தமான தகவல்

1. **நிதியம் கிடைக்கும் தோற்றுவாய்.**

☐ வியாபார வருமானம் ☐ சொத்து விற்பனை/ இருப்புகள் ☐ கொடை/தர்மஸ்தாபனம் ( உள்நாட்டு /வெளிநாட்டு) ☐ ஏனையவை……………………… (தயவுசெய்து குறிப்பிடுக)

2. **எதிர்பார்க்கப்பட்ட தொகைகள்: கணக்கிற்கு மாதமொன்றுக்கு ரூபாக்களில் கிடைக்கும் எதிர்பார்க்கப்பட்ட/சாதாரண வைப்புத் தொகைகள்**

☐ 100,000/-க்கு குறைவு ☐ 1,000,001/- முதல் 2,000,000/- ☐ 5,000,001/- முதல் 7,000,000/-

☐ 100,001/- முதல் 500,000/- ☐ 2,000,001/- முதல் 3,000,000/- ☐ 7,000,001/- முதல் 10,000,000/-

☐ 500,001/- முதல் 1,000,000/- ☐ 3,000,001/- முதல் 5,000,000/- ☐ 10,000,000/-க்கு மேல்

3. **வியாபாரம் வசமுள்ள சொத்துக்கள்**

☐ சொத்து/வளாகம் ☐ மோட்டார் வாகனம் ☐ நிதி சொத்துக்கள் ☐ முதலீடு ☐ ஏனையவை ……....(தயவுசெய்து குறிப்பிடுக)

4. **சொத்துக்கள் கிடைக்கும் தோற்றுவாய்- சொத்துக்களைப் பெற்றது யாரிடமிருந்து?**

☐ வருமானம் (குறிப்பிடுக) ☐ வங்கி வசதி ☐ முதலீடு ☐ நன்கொடை (உள்நாடு/வெளிநாடு) ☐ ஏனையவை ….….(தயவுசெய்து குறிப்பிடுக)

**துணை கம்பனி/சார்ந்த நிறுவனங்கள்**

1. நீங்கள் வேறு கம்பனிகளின் நிறுவனத்தின்
அ) துணைக் கம்பனியாகும். (அதாவது 50%க்கு மேற்பட்ட உரித்து)

……………………………………………………………………………………………

ஆ) சார்ந்த கம்பனியாகும். (அதாவது 20% - 50% உரித்து)

……………………………………………………………………………………………

2.பிரதான/துணை கம்பனி உள்நாட்டு/வெளிநாட்டு பங்கு பரிவர்த்தனையில் பட்டியலப்படுத்தப்பட்டுள்ளதா? ஆம்/இல்லை ("ஆம்" எனில் தயவுசெய்து விபரம் தருக)

……………………………………………………………………………………………

3. உங்கள் கம்பனி வசம் துணைக் கம்பனிகள்/சார்ந்த நிறுவனங்கள் உண்டா? ஆம்/இல்லை ("ஆம்" எனில் தயவுசெய்து விபரம் தருக)
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………

**இணைந்த நிறுவனங்கள், சார்ந்த நிறுவனங்கள், அமைப்புகள், துணை நிறுவனங்கள், இடைச் சேர்க்கப்பட்ட நிறுவனங்கள் என்பவற்றின் விபரங்கள் (இருப்பின்)**

| நிறுவனத்தின் பெயர் | வியாபார பதிவு இலக்கம் | பதிவுசெய்த முகவரியும் தபால் குறியீடும் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

## நிதி தகவல்கள்

**கடந்த வருடத்திற்காக கணக்காய்வு செய்த அறிக்கை உண்டா?** ☐ ஆம் ☐ இல்லை **குறிப்பு : புதிய கம்பனியெனில் தயவு செய்து நடப்பு வருடத்தின் கீழ் உத்தேச தகவல்களுடன் பின்வரும் தகவல்களைப் பூர்த்தி செய்யவும்.**

| விபரம் (ரூபா 000) | நடப்பு வருடம் | முன்னைய வருடம் | |
|---|---|---|---|
| | | 1 | 2 |
| வருடாந்த விற்பனை செலவு | | | |
| தேறிய இலாபம்/நட்டம் | | | |
| செலுத்தி முடித்த மூலதனம் + சேர்ந்த இலாபம் | | | |

## பதவி வகிப்போரின்/பங்குடைமையாளர்களின் தகவல்கள்

| வாக்குரித்தான பங்குகளில் 10%க்கு மேற்பட்ட தொகை உரித்தான உத்தியோகத்தர்களின்/ பங்குடைமையாளர்களின் பெயர் | தேசிய அடையாள அட்டை இலக்கம்/கடவுச் சீட்டு இலக்கம் | வகிக்கும் பங்குகளின் சதவீதம் % (ஏற்புடையதானால்) | தொலைபேசி இலக்கம் | முகவரி |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

**நீங்கள் வெளிநாட்டு நபரா?**

☐ ஆம், நான்/நாம்...................................... நாட்டின் பிரசை/பிரசைகள். எனது/எமது கடவுச்சீட்டு இலக்கம்/இலக்கங்கள் ....................................................
(வெளிநாட்டில் பதிவு செய்த கம்பனியானால் தயவுசெய்து பதிவு இலக்கத்தைத் தருக)

☐ இல்லை. பிரசையல்ல/பிரசைகள் அல்ல. எதிர்காலத்தில் வெளிநாடொன்றில் பிரசையானால்/பிரசைகளானால் அதுபற்றி வங்கிக்கு அறிவிக்க சம்மதிக்கிறேன்/றோம்

**நீங்கள் அரசியல் தொடர்புள்ள நபரா?** ☐ **ஆம்** ☐ **இல்லை**

**நீங்கள் வெளிநாட்டு கணக்குகளுக்கு வரி அறவிடும் இணங்கியொழுகும் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட "அமெரிக்க நபர்" என்ற வரைவிலக்கணத் திற்குட்பட்ட நபரா?** ☐ **ஆம்** ☐ **இல்லை**

- "வெளிநாட்டுநபர்" மற்றும் "அரசியலில் சம்பந்தப்பட்டநபர்" என்பதன் வரைவிலக்கணத்தை தயவுசெய்து இந்தபக்கத்தில் முடிவில் பார்க்கவும்.

**"அமெரிக்க நபர்" என்ற வரைவிலக்கணத்தின் கீழ் ஆட்கள் தெரிவிக்கும் கூற்று (ஏற்புடையவாறு "✓" அடையாளமிடுக)**

☐ 1. (அ) வெளிநாட்டு சொத்துக்கள் ஊடாக ஐக்கிய குடியரசு பிரசைகள் வரி செலுத்தத் தவறுவதைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்ட ஐக்கிய குடியரசு சட்டமான "வெளிநாட்டு கணக்குகளுக்கு வரி அறவிடுவதை இணங்கியொழுகும் சட்டத்தின்" ஏற்பாடுகளின் கீழ் "அமெரிக்க நபர்" (US Person) என்பதன் கீழுள்ள வரைவிலக்கணத்திற்கு நான் உரித்தாகிறேன்.

(ஆ) "வெளிநாட்டு கணக்குகளுக்கு வரி அறவிடும் சட்டம்:" நாட்டுக்கு வெளியில் அமைந்துள்ள மற்றும் செல்லுபடியானது என்பதையும், அந்தச் சட்டத்தின் கீழ் "அமெரிக்க நபாகள்" வெளிநாட்டில் பேணுகின்ற அவர்களின் நிதி சொத்து விபரங்களை அறிவிப்பது அவசியம் என்பதையும நான் புரிந்து கொண்டுள்ளேன் என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

(இ) ஆகவே, அமெரிக்க ஐக்கிய குடியரசின் "உள்ளக வருமான சேவை" (I.R.S.)க்கு நான்/நாம் பேணுகின்ற கணக்கின் மற்றும் முதலீடுகளின் குறித்த சகல தகவல்களையும் அறிவிக்கும்படி "வெளிநாட்டு கணக்குகளுக்கு வரி அறவிடுவதை இணங்கியொழுகும் சட்டத்தின்" பிரகாரம் வெளிநாட்டு நிதி நிறுவனமாக ஏற்றுக் கொண்டுள்ள மக்கள் வங்கியிடம் நான் இத்தால் கேட்டுக் கொள்ளுகிறேன்

(ஈ) இலங்கையின் 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் 77வது பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம், அதன் ஏற்பாடுகள் தொடர்பாக பூரண அறிவுடனும் புரிந்துணர்வுடனும் நான் இந்த உடன்பாட்டை வழங்கியுள்ளேன் என்பதை நான் உறுதிப்படுத்துகிறேன்

☐ 2. வெளிநாட்டு கணக்குகளுக்கு வரி அறவிடுவதை இணங்கியொழுகும் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள"அமெரிக்க நபர்" என்ற வரைவிலக்கணத்திற்கு நான் உரித்தாகவில்லை.என்பதோடு, எதிர்காலத்தில் நான் அமெரிக்க நபரானால் வங்கிக்கு அறிவிக்க நான் இத்தால் உடன்படுகிறேன்.

குறிப்பு:

- வரையறுக்கப்பட்ட பொறுப்புக்கள் கம்பனியொன்றை ஆரம்பிக்கும்போது சகல பணிப்பாளர்கள், உத்தியோகத்தர்கள், பிரதான பங்குடைமையாளர்கள் ஆகியோர் "உங்களுடைய வாடிக்கையாளரை அறிந்துகொள்க" (தனிநபர்) மாதிரி படிவ KYC இலக்கம் PF0300A நிரப்ப வேண்டியதோடு, அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும்.
- **கணக்கின் ஒரு தரப்பு (பணிப்பாளர் ஒருவர்) அரசியலில் ஈடுபடும் நபராகும் சந்தர்ப்பத்தில் அக் கணக்கு அரசியலுக்கு வெளிப்படுத்தப்பட்ட கணக்காக கருதப்படும். அவ்வாறே கணக்கின் ஒரு தரப்பு அமெரிக்க பிரசையாகும் சந்தர்ப்பத்தில் கணக்கிற்காகவும் வெளிநாட்டு கணக்குகளுக்கான வரி அறவிடும் இணங்கியொழுகல் தொடர்பான பிரகடனத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.**
- வெளிநாடுகளில் வதிகின்ற சகல பணிப்பாளர்கள் சம்பந்தப்பட்ட தகவல்களை குறித்த நாட்டின் தூதரங்கள் அல்லது உயர் ஸ்தானிகர் அலுவகம் ஊடாகப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

## நடைமுறைக் கணக்குகள் - நிபந்தனைகளும் நியதிகளும்

1. நடைமுறைக் கணக்கொன்றைத் திறப்பதற்காக உரிய ஆரம்ப வைப்புத் தொகை ஒவ்வொரு கிளைக்கு அமைய வேறுபடும். தயவுசெய்து கணக்கைத் திறப்பதற்கு எதிர்பார்க்கின்ற ஆரம்ப வைப்புத் தொகைக்கான உரிய தொகையை கணக்கைத் திறப்பதற்கு எதிர்பார்க்கும் கிளையில் விசாரிக்கவும்.

2. (அ) கடமை நேரம் அந்தந்த கிளைகள் தெரிவிக்கும் கடமை நேரங்களாகும்
   (ஆ) நடைமுறைக் கணக்கு மீதிக்கு வட்டி செலுத்தப்பட மாட்டாது.

3. காசோலை புத்தகத்திற்கான கட்டணம் நடைமுறைக் கணக்கில் பற்று வைக்கப்படும். மேலும், காசோலையைத் தவிர்த்து ஏனைய முறையில் பணம் செலுத்துவதை மறுக்கும் உரிமை வங்கிக்கு உண்டு. காசோலைகளைப் பயன்படுத்தும்போது பின்வரும் விடயங்களில் மிகக் கவனமாக கவனம் செலுத்தும்படி வாடிக்கையாளர்களிடம் கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

   (அ) காசோலைப் புத்தகங்கள், அதிகாரம் அளிக்கப்படாத எவரேனும் நபர்களின் கைகளுக்கு கிட்டுவதற்கு இடமளித்தலாகாது. வாடிக்கையாளருக்கு வழங்கப்பட்டுள்ள காசோலைப் புத்தகத்தை/ காசோலைப் புத்தகங்களைப் பயன்படுத்தும்போது அல்லது வேறு விதமாக நிழ்ந்த கவனயீனம் காரணமாக தவறான கையொப்பம்/கையொப்பங்கள் இடப்பட்ட காசோலைக்கு பணம் செலுத்தப்பட்டுள்ளபோது அதன் பொறுப்பை வங்கி ஏற்றுக் கொள்ளாது.

   (ஆ) காசோலைகளில் கையொப்பம் இடும்போது வங்கியில் வைக்கப்பட்டுள்ள மாதிரி கையொப்ப பத்திரத்தின் மாதிரி கையொப்பத்திற்கு சமமாக யொப்பமிட வேண்டும்.

   (இ) காசோலை எழுதும்போது பணத் தொகையை எழுத்திலும் இலக்கத்திலும் தெளிவாக ஒரே மொழியில் எழுத வேண்டும். அத்துடன் எழுதியதன் பின்னர் எழுத்துக்களுக்கு அல்லது இலக்கங்களுக்கு இடையில் மீண்டும் எழுதுவதற்கு இடம் வைத்தலாகாது.

   (ஈ) காசோலையில் ஏதேனும் மாற்றம் செய்ய வேண்டி ஏற்பட்டால் அந்த மாற்றம் சரியென்பதற்கு காசோலை எழுதிக் கொடுப்பவர் முழுமையான கையொப்பமிட்டு சான்றுப்படுத்த வேண்டும்.

   (உ) பணம் செலுத்துவதற்காக சமர்ப்பிக்கின்ற திகதியிலிருந்து ஆறு மாதங்களுக்கு அல்லது அதற்கு முந்திய திகதியுடைய காசோலைகளுக்குப் பணம் செலுத்துவதை வங்கி மறுக்க முடியும்.

   (ஊ) தன்வசமுள்ள காசோலைப் புத்தகம் அல்லது அதில் ஒரு தாள் காணாமற் போனால் அதுபற்றி உடனே வங்கிக்கு அறிவிக்க வேண்டும்.

4. கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை நன்றாகக் கவனத்திற் கொள்ளும்படி வாடிக்கையாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

   (அ) தமது கணக்கில் மேற்கொள்ளப்படுகின்ற ஒவ்வொரு செலுத்தீட்டுக்கும் அது தொடர்பான அடிச்சிட்டையில் அல்லது பற்றுச் சீட்டில் வங்கியின் அதிகாரம் பெற்ற பிரதிநிதியின் முழுமையான கையொப்பம் இடப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். கணினி பெறுகைச் சீட்டாக இருந்தால் அத்தகைய கையொப்பம் அவசியமில்லை.

   (ஆ) காசாக்கப்படாத வரவு பத்திரத்தின் மீது வழங்கப்பட்ட காசோலைகளுக்கு பணம் செலுத்த வங்கி கட்டுப்பட்டிருக்கவில்லை.

5. வாடிக்கையாளர்கள் அவர்களின் கணக்குகளிலிருந்து பணம் மீளப் பெறும்போது பின்வரும் விடயங்களை நன்றாகக் கவனத்திற் கொள்ள வேண்டும்.

   (அ) வாடிக்கையாளர்கள் பணம் மீளப் பெறும்போது பூர்வாங்க ஏற்பாடுகளைச் செய்து கொள்ளாமல், கணக்கில் உள்ள மீதியை விஞ்சுதலாகாது.

   (ஆ) கணக்கின் மீதியைக் கவனத்திற் கொண்டு காசோலைகளை எழுதும்போது வாடிக்கையாளர் வங்கிக்கு வழங்கியுள்ள ஆனால் இதுவரை செலுத்தீட்டுக்காக வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத அனைத்து காசோலைகளின் பெறுமதியைக் கழித்ததன் பின்னர் மீதியிருக்கின்ற மீதிக்கு மாத்திரம் காசோலைகளை எழுத வேண்டும்.

   (இ) இந்த அமைப்புவிதி தொடருக்கும் வங்கி காலத்திற்குக் காலம் விதிக்கின்ற ஏனைய அமைப்புவிதிகளுக்கும் முரணாக வழங்கப்படுகின்ற காசோலைகளுக்கு பணம் செலுத்துவதை மறுக்கும் உரிமை வங்கிக்கு உண்டு.

6. வைப்பிலிடப்பட்ட காசோலை காசாக்கப்படாமல் உள்ளது அல்லது தவறாக வரவாகியுள்ள பதிவு தொடர்பாக தாமதமாக அறிந்து கொள்ளும்போது காசாக்கப்படாத காசோலைகளுக்கு உரிய வரவு பதிவு/தவறாக வரவான பதிவுகள் மீள் நோக்குவதற்கு வங்கிக்கு உரித்து உண்டு.

7. வங்கி ஒவ்வொரு நடைமுறைக் கணக்கு உரிமையாளர்களுக்கு மாதாந்தம் கணக்கு கூற்றுகளை வழங்கும். கூற்று கிடைத்தவுடன் அதைப் பரீட்சித்துப் பார்த்து ஏதேனும் தவறுகள் அல்லது மாற்றங்கள் இருப்பின் அதுபற்றி கூற்று கிடைத்து 14 நாட்களுக்குள் வங்கிக்கு அறிவிக்க வேண்டும்.

8. தேவைப்படும் சந்தர்ப்பங்களில் வங்கியினால் தரகு மற்றும் கட்டணம் அறவிடப்படும். கணக்கில் போதியளவு மீதி இல்லாமையால் மதிப்பற்றதாகும் அந்தந்த காசோலைகளுக்கும் செலுத்தீடு நிறுத்தப்படுகின்ற காசோலைகளுக்கும் தரகு தொகையொன்று அறவிடப்படும். காசோலைக்கு பணம் செலுத்துவதை நிறுத்தும்படி காசோலை எழுதிக் கொடுப்பவரிடமிருந்து கிடைக்கும் எழுத்துமூல அறிவித்தலை வங்கி குறித்துக் கொள்ளும். ஆனால் அவ்வாறில்லாத சந்தர்ப்பத்தில், அத்தகைய அறிவுறுத்தல்களுக்கு அமைவாக செயலாற்றாதபோது வங்கி பொறுப்புக்கூறலுக்கு உட்படாது.

9. இந்த நிபந்தனைகளையும் நியதிகளையும் மாற்றும், திருத்தும் அல்லது சேர்க்கும் உரிமை வங்கிக்கு உண்டு. அவ்வாறு மாற்றிய, திருத்திய அல்லது சேர்த்த நிபந்தனைகளும் நியதிகளும் செயற்பட்டவுடன், அதுபற்றி வாடிக்கையாளர்களுக்கு அறிவித்தாலும் அறிவிக்காவிட்டாலும், அவர்கள் அனைவரும் அதற்கு கட்டுப்படுவார்கள்.

10. உங்களுடைய முகவரியில்/மின்னஞ்சல் முகவரியில் மற்றும் தொலைபேசி இலக்கத்தில் ஏதேனும் மாற்றம் ஏற்பட்டால் குறித்த கிளைக்கு உடனே அறிவிக்க வேண்டும்.

11 . **வெளிநாட்டு நாணய கணக்குகளைப் பேணுதல், நிர்வகிக்கும் செலாவணி கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளையும் நியதிகளையும் இணங்கியொழுகி செயலாற்றுவதற்கும் அவற்றிற்கு கட்டுப்படுவதற்கும் வாடிக்கையாளர் உடன்பட வேண்டும்.**

12. நடைமுறைக் கணக்கு 1 வருடம் செயற்படாமல் இருந்தால் வருட முடிவில் செயற்படா கணக்கு வகைக்கு மாறும். அத்தகைய கணக்குகள் செயற்படா வகைக்கு மாறி 10 வருட காலத்திற்குள் அது செயற்பட்டதாக காரணிகள் இல்லாவிட்டால் அக் கணக்கை கைவிடப்பட்ட சொத்தாக இலங்கை மத்திய வங்கிக்கு அறிவிக்கப்படும்.

13. ஆட்பதிவு திணைக்களத்தினால் வழங்கப்படுகின்ற இலத்திரனியல் இடைமுகத்தைப் (Electronic Interface) பயன்படுத்தி எனது/எமது தேசிய அடையாள அட்டையை மெய்யுறுதிப்படுத்துவதற்கு வங்கிக்கு அதிகாரம் அளிக்கிறேன்/அளிக்கிறோம்.

## சேமிப்புக் கணக்குகள் - நிபந்தனைகளும் நியதிகளும்

1. கணக்கை செயற்படுத்துவது தொடர்பாக வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் மாறுகின்றன என்ற அறிவித்தல் கிடைக்கும் வரை மேலே வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் செல்லுபடியான அறிவுறுத்தல்களாகக் கருதப்படும்.

2. முகவரியில் மாற்றம் ஏற்படும் சந்தர்ப்பத்தில் அதுபற்றி தாமதமின்றி குறித்த கிளைக்கு அறிவிக்க வேண்டும்.

3. பணத்தைத் தவிர வேறு பொருட்கள் சேமிப்புக் கணக்கில் பொதுவாக சேகரிக்கப்பட மாட்டாது.

4. சேமிப்புக் கணக்கு பண வைப்பு புத்தகம் தொலைந்து போனால் அதுபற்றி தாமதமின்றி வங்கிக்கு எழுத்துமூலம் அறிவிக்க வேண்டும். பண வைப்பு புத்தகம் தொலைந்து போனால் அல்லது உருகுலைந்து போனால் அதற்கு ஏற்றுக் கொள்ளக்கூடிய விடயங்களைச் சமர்ப்பிக்கும்போது, வங்கி கணக்கு உரிமையாளருக்கு புதிய பண வைப்பு புத்தகமொன்றை வழங்கும். அவ்வாறு வழங்குகின்ற பண வைப்பு புத்தகத்திற்கு வங்கி தீர்மானிக்கின்ற நடப்பு கட்டணத்தைச் செலுத்த உடன்பட வேண்டும்.

5. கணக்கில் இருக்க வேண்டிய குறைந்தபட்ச மீதி அல்லது “குறைந்தபட்ச மீதி" என்ற வகையில் வங்கி காலத்திற்குக் காலம் தீர்மானிக்கின்ற மீதி கணக்கில் இல்லாதபோது ஒரு மாதத்திற்கு ரூபா 25/- தரகு தொகையொன்றை அல்லது வங்கி காலத்திற்குக் காலம் தீர்மானிக்கின்ற தரகு கணக்கிலிருந்து அறவிடப்படுவதோடு, அவ்வாறு கணக்கிலிருந்து தரகு தொகையை அறவிடுவதன் மூலம் கணக்கில் பணம் முடிந்து விட்டால் வாடிக்கையாளருக்கு அறிவித்ததன் பின்னர் கணக்கை மூடும் உரிமை வங்கிக்கு உண்டு. இதற்காக வாடிக்கையாளர் வங்கிக்கு வழங்கியுள்ள கடைசி முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் கடிதமொன்றை அனுப்புதல் “போதுமான அறிவித்தல்” எனக் கருதப்படுகின்றது.

6. தேவையான சந்தர்ப்பங்களில் வங்கி அறவிடுகின்ற கட்டணத்தையும் அறவீட்டுக்காக செலுத்துவதற்கு உடன்பட வேண்டும்.

7. கணக்கு உரிமையாளரால் திறக்கப்பட்ட கணக்கிற்கு வங்கி சேமிப்பு பண வைப்பு புத்தகமொன்றை வழங்கும். கணக்கு வைத்திருப்பவர் வங்கியிலிருந்து வெளியேறுவதற்கு முன்னர் பண வைப்பு புத்தகத்தில் பதியப்பட்டுள்ள கணினி பதிவைப் பரிசீலித்து சரி என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.
அவ்வாறிருப்பினும் வாடிக்கையாளர் இலத்திரனியல் கணக்கு கூற்றைக் கோரும் சந்தர்ப்பத்தில் பண வைப்பு புத்தகம் வழங்கப்பட மாட்டாது.

8. கணக்கில் கையொப்பமிடும் அதிகாரம் இருந்தால் மாத்திரம் செலுத்தீட்டுக்கு பண வைப்பு புத்தகத்தை சமர்ப்பிக்கும் நபரை கணக்கு வைத்திருப்பவராக வங்கி ஏற்றுக் கொள்ளுவதோடு அவருடைய கையொப்பத்தையும் அடையாளத்தையும் உறுதிப்படுத்திக் கொண்டதன் பின்னர் அதன் பிரகாரம் பணம் செலுத்தப்படும்.

9. சேமிப்புக் கணக்கு 2 வருடங்கள் செயற்படாமல் இருந்தால் இரண்டு வருட முடிவில் செயறடபடா கணக்கு வகைக்கு மாற்றப்படும். அத்தகைய கணக்குகள் செயற்படா வகைக்கு மாறி 10 வருட காலத்திற்குள் அது செயற்பட்டதாக காரணிகள் இல்லாவிட்டால் அக் கணக்கை கைவிடப்பட்ட சொத்தாக இலங்கை மத்திய வங்கிக்கு அறிவிக்கப்படும்.

10. **இந்தக் கணக்கைப் பேணுவது தொடர்பான நிபந்தனைகளையும் நியதிகளையும் மாற்றும், திருத்தும் அல்லது சேர்க்கும் உரிமை வங்கிக்கு உண்டு. அவ்வாறு மாற்றிய, திருத்திய அல்லது சேர்த்த நிபந்தனைகளும் நியதிகளும் செயற்பட்டவுடன், அதுபற்றி வாடிக்கையாளர்களுக்கு அறிவித்தாலும் அறிவிக்காவிட்டாலும், அவர்கள் அனைவரும் அதற்கு கட்டுப்படுவார்கள்.**

11. ஆட்பதிவு திணைக்களத்தினால் வழங்கப்படுகின்ற இலத்திரனியல் இடைமுகத்தைப் (Electronic Interface) பயன்படுத்தி எனது/எமது தேசிய அடையாள அட்டையை மெய்யுறுதிப்படுத்துவதற்கு வங்கிக்கு அதிகாரம் அளிக்கிறேன்/அளிக்கிறோம்.

நான்/நாம் மேலே வழங்கியுள்ள தகவல்கள் சரியானதும் உண்மையானதும் என உறுதிப்படுத்துவதோடு, கணக்கைப் பேணுவது தொடர்பாக மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் நியதிகளுக்கும் உடன்படுவதற்கும் அவற்றிற்கு கட்டுப்படுவதற்கும் நான் /நாம் மேலே தெரிவித்துள்ள கூற்றை இணங்கியொழுகி செயலாற்றுவதற்கும் அவற்றிற்கு கட்டுப்படுவதற்கும் நான் நாம் இத்தால் உடன்படுகிறேன்/ உடன்படுகிறோம்.

..............................................................................

(கையொப்பமிட அதிகாரமளிக்கப்பட்டவர்/அங்கீகரிக்கப்பட்டவர்
கம்பனி முத்திரையுடன் கையொப்பம்)

“வெளிநாட்டு நபர்" என்பதன் வரைவிலக்கணம்

- வெளிநாட்டு பிரசையொருவர் வேறொரு நாட்டில் வதிபவராக இருந்தாலும் வெளிநாடொன்றில் பிறந்து அவ்வாறு பிறந்த நாட்டில் குடியுரிமையைக் கைவிடாத நபர்களும் உட்பட
- வெளிநாடொன்றில் சட்டபூர்வமாக குடியிருப்பவர்
- வெளிநாடொன்றில் குடியிருக்கின்ற நபர் ஒருவர்
- விசா காலத்தின் அடிப்படையில் வெளிநாட்டில் ஏதேனும் சில நாட்களைக் கழிக்கின்ற நபர் ஒருவர்.
- வெளிநாடொன்றில் கூட்டுத்தாபனம், மரணசாதன சொத்து மற்றும் நம்பிக்கைப்பொறுப்பு
- வெளிநாடொன்றில் அல்லது அதற்கு உரிய அதிகார பிரதேசத்தில் தொடர்புகள் அல்லது உரிமைகள் உள்ள ஏதேனும் ஆள் அலகு.
- “போதியளவு பயனாளி உரித்தாளர்” எனக் கருதக்கூடிய ஒரு வெளிநாட்டவராவது உள்ளடங்கும் எவரேனும் தனிநபர் அலகு.

“அரசியல் கலப்புடைய நபர்” என்பதன் வரைவிலக்கணம்

**உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் அரசின் மூலம் அல்லது சர்வதேச அமைப்பின் மூலம் முதன்மை அரச கடமை ஒப்படைக்கப்பட்டுள்ள எவரேனும் நபர் ஒருவர் எனக் கருதுவதோடு,**

- ஏதேனும் அரசின் அல்லது அரசாங்கத்தின் தலைவர்
- அரசியல்வாதி
- சிரேஷ்ட அரச அதிகாரி, நீதிமன்ற அதிகாரி அல்லது இராணுவ அதிகாரி
- அரசு வசமுள்ள கூட்டுத்தாபனம், அரச அல்லது சுயாதீன நிறுவனமொன்றின் சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரி
- அரசியல் கலப்புள்ள நபரின் குடும்ப உறுப்பினர்களும் மிக நெருக்கமானவர்களும் உரித்தாவார்கள்.